போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

I-A பாகத்தின் ஸப்ளிமெண்ட்.

SUPPLEMENT TO PART I-A OF THE FORT ST. GEORGE GAZETTE,

MARCH 21, 1922.

நெ. 12.] மதராஸ்: செவ்வாய்க்கிழமை மாலை, 1922-ம் வருஷம் மார்ச்சு மீ 21 உ. [விலை, 1 அணா.

கவர்ன்மெண்ட் விளம்பரங்களின் தமிழ்மொழிபெயர்ப்பு.

Tamil Translations of Notifications by Government.

லோகல் ஸெல்ப் கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்ட்.

விளம்பரம்.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1921-ம் வருஷம் ஸெப்டெம்பர் மீ 27 உ.

நெ. 981.—சென்னையிலுள்ள நாய்கள் விஷயமாய் மேல் விசாரணை செய்வதற்காகவும் சென்னைக்குள்ளே கொண்டுவரப்படும் வெட்டுமரத்துக்கு வரி விதித்து வசூலிப்பதற்காகவும் சென்னை நகர் விசாரணைச்சங்கத்தாரால் செய்யப்பட்டு, 1919-ம் வருஷத்திய சென்னை ராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்ட் 352-வது பிரிவின்படி கவர்ன்மெண்டாரால் ஜாரி செய்யப்பட்ட அடியிற்கண்ட சகாயச்சட்டங்கள் யாவர்க்கும் தெரியும்படி பிரசுரிக்கப்படுகின்றன :—

சென்னையிலுள்ள நாய்கள் விஷயமாய் மேல்விசாரணை செய்வதற்காக 1919-ம் வருஷத்திய சென்னை ராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்ட் 349-வது பிரிவைச் சேர்ந்த (29) குறிப்பிட்ட பகுதியின்படி செய்யப்பட்ட சகாயச்சட்டம்.

நாய்கள் விஷயமாய் மேல்விசாரணை செய்வதற்காக சகாயச்சட்டம்.

மியுனிஸிபல் எல்லைகளுக்குள் வைத்திருக்கப்பட்ட ஒவ்வொரு நாய்க்கும் அதன் சொந்தக்காரர் அதன் கழுத்தைச்சுற்றிலும் ஒரு பட்டை கட்டி வைத்திருக்கவேண்டும்; மேலும், 1919-ம் வருஷத்திய சென்னை ராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படி லைஸென்ஸ் கொடுத்திருக்கிற ஒவ்வொரு நாய்க்கும், அந்தப் பட்டையின்மேல் பொருத்தி எப்போதும் அந்த நாயின் கழுத்தில் போட்டுவைத்திருப்பதற்காக உலோகத்தினால் செய்த பில்லையொன்று இருக்கவேண்டும். இந்த பில்லையை மியுனிஸிபல் ஆபிஸில் ஒரு அணா செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பட்டைகளில்லாத நாய்களெல்லாம் பட்டியாய்த் திரிந்துகொண்டிருக்கும் நாய்களாக எண்ணப்பட்டு, எப்போதாகிலும் கொல்லப்படுவதற்கு உட்பட்டவைகளாகும். அவை மூன்று நாள்வரையில் வைத்துவைக்கப்படலாம்.

சென்னைக்குள் கொண்டுவரப்படும் வெட்டுமரத்துக்கு வரி விதித்து வசூல் செய்வதற்காக 1919-ம் வருஷத்து 4-வது ஆக்டாகிய சென்னை ராஜதானிப் பட்டணத்து ம்யுனிஸிபல் ஆக்ட் 129 வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படியும் 349-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட பகுதியின்படியும் செய்யப்பட்ட சகாயச்சட்டங்கள்.

வெட்டுமரம் என்பதன் அர்த்தம்.

1. (a) வெட்டுமரம் என்பது - வீடு கட்டுவதற்காவது கப்பல் செய்வதற்காவது தச்சு வேலை, பொருத்து வேலை முதலிய வேலைகளிலாவது உபயோகிக்கப்படுவதற்காக தூலங்கள், கைமரங்கள், கம்பங்கள், பலகைகள், கனத்த பலகைகள் முதலியவைகளாய்ச் செய்யப்பட்டாகிலும் செய்யப்படக்கூடியதாகவாகிலுமுள்ள யாதொரு மரம் அல்லது மரத்தின் பாகம் என்று அர்த்தமாவதுமல்லாமல், அதில் அப்படிப்பட்ட மரம் அல்லது மரத்தின் பாகம் என்பதும் அடங்கும்; மேலும், அதில் செம்மரம், மூங்கில், (10 அடி நீளத்துக்கு மேற்பட்ட) சவுக்குமரக் கம்பங்கள் முதலியவை என்பதும் அடங்கும்.

(b) ஒரு டன் வெட்டுமரம் என்றால் 50 கன அடி என்று அர்த்தமாகும். கால் டன்னுக்குக் குறைவாயுள்ளதெதுவும் கால் டன்னாகவும், கால் டன்னுக்கு மேற்பட்டும் அரை டன்னுக்குக் குறைந்தும் உள்ளதெதுவும் அரை டன்னாகவும், பின்னும் இதே மாதிரியாகவும் கணக்கிடப்படும்.

2. வெட்டுமரமானது சென்னைக்குள் கொண்டுவரப்படுவதற்குமுன்னமேயே அதற்கு அடியிற்கண்டபடி வரி விதித்து வசூலிக்கப்படும் :—

வசூலிக்கும் பற்பல நபர்களின் பெயர்கள்.

(a) கடல் மார்க்கமாய் இறக்குமதி செய்யப்படுகிறதற்கு.—சென்னபட்டணம் ரேவில், ஸீ கஸ்டமஸ் கலெக்டராலாவது போர்ட் ட்ரஸ்ட் என்னும் சபையின் சேர்மனாலாவது (அக்கிராசனாதிபதியாலாவது);

(b) ரெயில்மார்க்கமாய் இறக்குமதி செய்யப்படுவதற்கு.—ரெயில்வே ஷெட்டுகளில் (கொட்டகைகளில்), முறையே சென்னை-தென் மஹாராஷ்டிர ரெயில்வே ஏஜென்டாலும் தென் இந்தியா ரெயில்வே ஏஜென்டாலும்;

(c) ரஸ்தா மார்க்கமாய் இறக்குமதி செய்யப்படுவதற்கு.—டோல் கேட்டுகளில் (சுங்கவாயில்களில்), சென்னை நகர் விசாரணைச்சங்கத்தைச் சேர்ந்த டோல் கன்ட்ராக்டரால்;

(d) கால்வாய் மார்க்கமாய் இறக்குமதி செய்யப்படுவதற்கு.—அடையாறு, எண்ணூர் லாக்குகளில், செங்கல்பட்டு டிவிழன் எக்ஸிக்யுடிவ் என்ஜினீரால்.

செலுத்தவேண்டிய வரி செலுத்தப்படுவதன்மேல், சொந்தக்காரருக்கு அடியிற்கண்ட நமூனாப்படி ரசீது கொடுக்கப்படும் :—

சென்னை நகர் விசாரணைச் சங்கம்.

ரெவினியு டிபார்ட்மென்ட்.

1919-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 129-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி வெட்டுமரத்துக்கு வரி செலுத்தினதற்காக ரசீது.

சென்னை ராஜதானிப்பட்டணத்துக்குள் ______ டன் ______ இறக்குமதி செய்ததற்கு வரியாகிய ______ ரூபாய் ______ அணாவர்கவுள்ள தொகை மாத்திரம் ______ இடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது.

______

ரூ. ______

இடம் ______

தேதி ______

(ரசீது) கொடுக்கும் உத்தியோகஸ்தர்.

விதித்துவாங்கவேண்டிய வரி வீதங்கள்.

3. யாதொரு வெட்டுமரத்தை சென்னபட்டணத்துக்குள் கொண்டுவர விரும்பும் ஒவ்வொரு நபரும் - பற்பல வகைகளைச் சேர்ந்த வெட்டுமரத்துக்கு அடியிற்கண்ட வரி செலுத்தவேண்டும் :—

வெட்டுமரம்	50 கன அடியுள்ள டன் ஒன்றுக்கு	ரூ. 5 வீதம்.
கீழ்த்தரமான செம்மரம்	,,	ரூ. 2 வீதம்.
10 அடி நீளத்துக்கு மேற்பட்ட சவுக்கு மரக் கம்பங்கள் முதலியவை	,,	ரூ. 1-8 வீதம்.
மூங்கில்	,,	ரூ. 1-8 வீதம்.

4. அடியிற்கண்ட வெட்டுமரம் (வரிவிதிக்கப்படுவதனின்று) நிவாரணைச் செய்யப்படும் :—

வரி விதிக்கப்படுவதனின்று நிவாரணை செய்யப்பட்டிருக்கும் வெட்டுமரத்தைப்பற்றிய விவரங்கள்.

(1) பொருத்து வேலைக்காரரால் செய்து முடிக்கப்பட்ட வேலை ; அதாவது, வீட்டிற்கு வேண்டிய இசைப்புகள், கதவுகள், சித்திரக் கம்பிகள், கண்ணாடி ஜன்னல்களின் சட்டங்கள், ஜன்னல் சட்டங்கள் முதலிய சாமான்கள் ;

(2) மேஜை நாற்காலி முதலிய சாமான்கள், பாரவண்டிகள் அல்லது மரத்தினால் செய்த இதர வண்டிகள், பெட்டிகள் அல்லது பீப்பாய்கள், கூடாரக் கம்பங்கள் முதலியவை ;

(3) சாயம்போடும் காரியங்களுக்காக தறித்த அடிமரங்களாயும் வேர்களாயுமுள்ள செம்மரம் ;

(4) துப்பாக்கிக் கட்டைகள், கோடாலிப் பிடிகள், சம்மட்டிப் பிடிகள், ஏர்க்கால்கள், வண்டிகளின் பாணல் என்னும் தட்டுகள்.

வரி செலுத்தப்படாவிட்டால் அதை இன்ன விதமாய் வசூலிக்கலாமென்பது.

5. (i) வெட்டுமரத்துக்கு வரி கேட்கப்படுவதன்மேல் செலுத்தப்படாவிட்டால், வரி வசூலிக்க நியமிக்கப்பட்ட நபர் - விதித்து வசூலிக்கவேண்டிய வரித்தொகைக்குச் சமமாயிருப்பதாக நியாயமாய் எண்ணக்கூடிய அளவுக்கு அந்த வெட்டுமர பாகத்தைக் கைப்பற்றி மறியல் செய்யலாம்.

(ii) வெட்டுமரத்தை மறியல் செய்யும் உத்தியோகஸ்தர் - மறியல் செய்யப்பட்ட சொத்துக்கு ஒரு ரசீது கொடுக்கவேண்டியதுமல்லாமல், கைப்பற்றப்பட்ட காலத்தில் ஷை வெட்டுமரம் யாருடைய வசத்திலிருந்ததோ அந்த நபருக்குப் பதினான்கு தினங்களுக்குள்ளாக விற்பனை நோடிஸ்கூட கொடுக்கவும்வேண்டும்.

(iii) (i) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கைப்பற்றி மறியல் செய்யப்பட்ட சகல வெட்டுமரத்தையும் 24 மணி நேரத்துக்குள் கம்மிஷனருக்காவது அவரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற வேறே நபருக்காவது அனுப்பிவிடவேண்டும்.

(iv) வெட்டுமரத்தின் சொந்தக்காரராவது அதற்கு பாத்தியதையுள்ள வேறே நபராவது அந்தப்படி குறிப்பிடப்பட்ட காலத்துக்குள்ளாகிலும் விற்பனைக்குமுன் எந்தக் காலத்திலாகிலும் அதைச் சுதந்தரித்துக்கேட்டால்,—

(a) அதற்குச் சேரவேண்டிய வரியும்,

(b) வரித்தொகைக்கு மேற்படாமல் கம்மிஷனர் கட்டளையிடக்கூடிய அபராதத் தொகையும்,

(c) கைப்பற்றி மறியல் செய்தது சம்பந்தமாய்ச் செய்யப்பட்ட செலவும் செலுத்தப்படுவதன்மேல், அதை அவருக்குத் திருப்பிக்கொடுத்துவிடவேண்டும்.

(v) அந்தப்படி குறிப்பிடப்பட்ட காலத்துக்குள் வெட்டுமரத்தின் சொந்தக்காரராவது அதற்கு பாத்தியதையுள்ள வேறே நபராவது அதைச் சுதந்தரித்துக் கேட்டு அதற்காகச் சேரவேண்டிய வரியை மறியல் சம்பந்தமான செலவுகள் சகிதமாக செலுத்தாவிட்டால், கம்மிஷனரானவர் - அதை பகிரங்கமான ஏலத்தில் விற்பனைசெய்து, அந்த விற்பனையில் கிடைத்த தொகையை (i) விற்பனை செய்யப்பட்ட வெட்டுமரத்துக்காகச் சேரவேண்டிய வரியையும், (ii) வரித்தொகைக்கு மேற்படாமல் கம்மிஷனர் கட்டளையிடக்கூடிய அபராதத் தொகையையும், (iii) கைப்பற்றி மறியல்செய்து விற்பனை செய்தது சம்பந்தமாகப் பிடித்த செலவையும் செலுத்துவதற்காக உபயோகிக்க வேண்டுமென்று கட்டளையிடலாம்.

(vi) அந்தப்படி செலுத்தப்பட்டபிறகு மிகுதி ஏதாகிலும் இருந்தால் அதன் விஷயத்தில், 1919-ம் ௵த்து 4-வது ஆக்ட் 4-வது ஷெட்யூலில் கண்ட 26-வது விதியைச் சேர்ந்த (c) குறிப்பிட்ட உபவிதியில் சொல்லியிருக்கிறபடி நடவடிக்கை நடத்தவேண்டும்.

(ரசீது) கொடுக்கும் உத்தியோகஸ்தரின் அலுவல்கள்.

6. வெட்டுமரத்துக்கு வரியை வசூலிக்க நியமிக்கப்படும் ஒவ்வொரு நபரும் - அந்த வரிகள் விதித்து வசூலிப்பது சம்பந்தமாய்க் கம்மிஷனர் உத்தரவு செய்யக்கூடிய கணக்குகள் வைத்து வரவேண்டும் ; மேலும், அந்தக் கணக்குகள் - கம்மிஷனராலாவது, ரெவினியு ஆபீஸராலாவது, இது விஷயமாய்க் கம்மிஷனரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு உத்தியோகஸ்தராலாவது நியாயமான காலங்களிலெல்லாம் பார்வையிடக்கூடியவையாயிருக்கவேண்டும்.

வாபஸ் விண்ணப்ப நமூனா.

7. ஷை ஆக்ட் 129-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி விதிக்கப்பட்ட வரியை வாபஸ் செய்யவேண்டுமென்று செய்துகொள்ளும் விண்ணப்பங்களை, அடியிற்கண்ட நமூனாப்படி கம்மிஷனருக்குச் செய்துகொள்ளவேண்டும்.

சென்னை நகர் விசாரணைச்சங்கம்.

ரெவினியு டிபார்ட்மென்ட்.

1919-ம் வருஷத்து 4-வது ஆக்டாகிய சென்னை ராஜதானிப்பட்டணத்து மியுனிஸிபல் ஆக்ட் 129-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட (2) அடையாளமிட்ட விலக்கு நிபந்தனையின் படி வெட்மேர வரியை வாபஸ் செய்யவேண்டுமென்று செய்துகொள்ளும் விண்ணப்ப நமூனு.

சென்னை நகர் விசாரணைச்சங்கத்தின்
கம்மிஷனருக்கு.

ஐயா,

இதில் கீழே விவரித்துக் காட்டியும் சென்னை ராஜதானிப்பட்டணத்தின் எல்லைகளுக் கப்பால் எற்றுமதி செய்யப்படப் போவதாயுமுள்ள க்கு ரூபாயை தயவுசெய்து எனக்கு வாபஸ் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன் :—

(முத்திரை எழுத்தால்) சாமானின் நம்பரும் குறியும்.	அதன்மேல் போட்டிருக்கும் ஏதாவது மேல்விலாசம் அல்லது அடையாளம்.	சாமான் விவரம்.	(முத்திரை எழுத்தால்) அளவு; இலக்கங்களால் மாத்திரமே அல்ல.		எந்தக்கப்பலில் இறக்குமதி செய்யப்பட்டது; கப்பலிலிருந்து எந்த மரக்கலத்தின் மூலமாக.	எப்போது.	இறக்குமதி செய்ததற்கு ரசீது கொடுக்கப்பட்டதின் நம்பரும் தேதியும்.	எந்த தேதிக்கு இறக்குமதி செய்யப்பட்டது.	எந்த மார்க்கமாய் ஏற்றுமதி செய்யப்படப் போகிறது.	அது எந்த ஸ்டேஷன் வழியாய் வெளியே போகிறதோ அந்த ஸ்டேஷனும் அது போகும் தேதியும்.	இருக்குமிடம்; எங்கே பார்வையிடக்கூடும்.	ஷரா.
			* டன்	கன அடி.								

* வெட்டுமரம் 50 கன அடி கொண்டது.

(விண்ணப்பதாரரின் கையெழுத்து)____________

தேதி, (அவர் வாசஞ்செய்யும் இடம்)____________

(அவர் வியாபாரம் செய்யும் இடம்)____________

8. சென்னபட்டணத்தின் எல்லைகளுக்கப்பால் ஏற்றுமதி செய்ய உத்தேசித்திருக்கும் தேதிக்குக் குறைந்தது 48 மணி நேரத்துக்கு முன்னதாக அப்படிப்பட்ட விண்ணப்பம் செய்துகொள்ளப்பட வேண்டியதுமல்லாமல், அதை இறக்குமதி செய்தபோது கொடுக்கப்பட்ட அசல் ரசீதையும் அதனுடன்கூட அனுப்பவேண்டும்.

வாபஸ் விண்ணப்பத்தை இன்ன காலத்துக்குள் தாக்கல் செய்யவேண்டுமென்பது.

வாபஸ் செய்யும் விஷயங்களைக் குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்கான திட்டங்கள்.

9. அசல் ரசீதில் குறிப்பிடப்பட்டிருக்கும் நபருக்கு (அல்லது கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற அவருடைய எஜெண்டுக்கு) மாத்திரமே தொகைகள் வாபஸ் செய்து கொடுக்கப்படும்; ஆனால்,

(i) ஷை ரசீதுகள் (எப்ரல்மீ 1வ-முதல் மார்ச்மீ 31வ- வரைக்குமுள்ள) எந்த ஸர்க்கார் வருஷத்துக்குச் சம்பந்தப்படுகின்றனவோ அந்த ஸர்க்கார் வருஷத்திலே மொத்தத்தில் பற்பல ரசீதுகளின்படி இறக்குமதி செய்யப்பட்ட (வெட்டுமரத்தின்) அளவுக்குக் குறைந்த யாதொரு அளவு சம்பந்தமாய் ஷை விண்ணப்பம் செய்து கொள்ளப்பட வேண்டும்;

(ii) அதை (வெட்டுமரத்தை) இறக்குமதி செய்ததற்கான ரசீது கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதத்துக்குள் ஷை விண்ணப்பம் செய்துகொள்ளப்பட வேண்டியதுமல்லாமல், வாபஸ் செய்யும்படி கேட்டுக்கொள்ளும் விண்ணப்பதாரர்களுக்கு வாபஸ் ரசீதுகள் ஒப்புவிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று வாரத்துக்குள் அவை கிரமமாய்ப் பூர்த்தி செய்து திருப்பிக் கொடுத்துவிடப்படவும்வேண்டும்; மேலும்,

(iii) வெட்டுமரமானது - உருவத்திலாவது பரிமாணத்திலாவது மாறுதல் ஒன்று மில்லாமல், இறக்குமதி செய்யப்பட்ட ஸ்திதியிலேயே ஏற்றுமதி செய்யப்படவேண்டும்.

எற்றுமதி செய்யப்பட்ட வெட்டுமரத்தைப் பார்வையிடுவது.

10. எற்றுமதி செய்வதாக மேலேகண்டபடி உத்தேசிக்கப்படும் சகல வெட்டுமரத்தையும், கம்மிஷனராவது ரெவினியு ஆபிஸராவது இதுவிஷயமாய்க் கம்மிஷனரால் அதிகாரம் கொடுக்கப்படக்கூடிய வேறே யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது கீழ் உத்தியோகஸ்தராவது நியாயமான எல்லாக் காலங்களிலும் பார்வையிடுவது சாத்தியமாயிருக்கவேண்டும்.

எற்றுமதி ஸெர்டிபிகேட்டுகள் கொடுப்பது.

11. ஷை வரி விதித்து வசூலிக்கும் வேலை ஒப்புவிக்கப் பெற்றிருக்கும் ஒவ்வொரு நபரும் - சென்னைக்கப்பால் வெட்டுமரம் எற்றுமதி செய்யப்பட்டபிறகு, அது எற்றுமதி செய்யப்பட்டிருப்பதைக் குறித்து ஸெர்டிபிகேட் ஒன்றைக் கம்மிஷனரிடத்தில் ஒப்பிக்கவேண்டும்; அந்த ஸெர்டிபிகேட்டில் ஷை வெட்டுமரம் யார்மூலமாய் வெளியே போயிருக்குமோ அந்த உத்தியோகஸ்தராகிலும் அவரைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் அல்லது கீழ் உத்தியோகஸ்தர்களில் எவராகிலும் கையெழுத்து செய்திருக்க வேண்டியதுமல்லாமல், அந்தப்படி எற்றுமதி செய்யப்படுவதைப் பார்வையிடுவதற்காகக் கம்மிஷனரால் அமர்த்திக்கொள்ளப்பட்ட அஸெஸ்ஸர்களில் ஒருவர் மேற்கையெழுத்து செய்திருக்கவும்வேண்டும்; மேலும், அந்த ஸெர்டிபிகேட் அடியிற்கண்ட நமூனாப்படி இருக்கவேணடும் :—

அசல்.

சென்னை நகர் விசாரணைச்சங்கம்.

ரெவினியு டிபார்ட்மென்ட்.

வெட்டுமர வரியை வாபஸ் செய்வதற்காக 1919-ம் வருஷத்து 4-வது ஆக்ட் 129-வது பிரிவின்படி செய்யப்பட்ட 11-வது சகாயச்சட்டத்தின்படி கொடுக்கப்படும் ஸெர்டிபிகேட் நமூனா.

(a) எற்றுமதி செய்பவரின் முழுப்பெயர்.
(b) கதவிலக்கமும் தெருவும் கிராமமும்.
(c) எந்த இடத்துக்கு எற்றுமதி செய்யப்படுகிறதோ அந்த இடத்தின் பெயர்.
(d) கடல் மார்க்கமாகவா, அப்படியிருந்தால் எந்த மரக்கலத்தின் மூலமாக, அல்லது சென்னை தென்மஹாராஷ்டிர ரெயில்வே அல்லது தென்இந்தியா ரெயில்வே மூலமாகவா, அல்லது (வடக்கு அல்லது தெற்கு) பக்கிங்காம்கால்வாய் வழியாகவா, அல்லது டோல்கேட்டுகள் வழியாகவா, அப்படியிருந்தால் இன்ன டோல்கேட் வழியாக.
(e)

(b) யில் வாசஞ் செய்துகொண்டு (b) யில் தொழில் நடத்திக்கொண்டிருக்கும் (a) என்பவர் சென்னை ராஜதானிப் பட்டணத்துக்கப்பால் இன்றையதினம் (d) மார்க்கமாய் அடியிற்கண்டதை (e) எற்றுமதி செய்து (c)க்கு ஒப்படை செய்திருக்கிறார்; அதாவது :—

	(முழுவதும் எழுத்தால்) சாமானின் நம்பரும் தன்மையும். (1)	அதன்மேல் காட்டியிருக்கும் மேல்விலாசம் அல்லது அடையாளம் எதாவது இருந்தால் அது. (2)	சாமான் விவரம். (3)	அளவு(முழுவதும் எழுத்தால்- இலக்கங்களால் மாத்திரம் அல்ல). (4)	ஷரா. (5)	
				* டன், கன அடி.	அஸெஸ்ஸரின் மேற்கையெழுத்து.	

* வெட்டுமரமானால் 50 கன அடி கொணடது.

தேதி ____________

ஸெர்டிபை செய்யும் (எந்த உத்தியோகஸ்தர் மூலமாய் வெளியே போயிற்றோ அந்த) உத்தியோகஸ்தரின் கையெழுத்து.

எற்றுமதி ஸெர்டிபிகேட்டை இன்ன காலத்துக்குள் கம்மிஷனருக்கு அனுப்ப வேண்டுமென்பது.

12. ஷை ஸெர்டிபிகேட் கொடுக்கும் உத்தியோகஸ்தர் - அந்த ஸெர்டிபிகேட்டின் அசல் பிரதியை ஒப்பிடைசாமான் எற்றுமதி செய்யப்பட்டபிறகு 48 மணி நேரத்துக்குள் கம்மிஷனருக்கு மேல்விலாசமிட்டு அனுப்பி, அதன் நகலைத் தம்மிடத்திலேயே வைத்துக்கொள்ளவேண்டும்.

எற்றுமதி செய்யப்பட்ட வெட்டுமரத்தின் விஷயத்தில் வாபஸ் செய்வது.

13. எற்றுமதி விஷயமாய்க் கம்மிஷனர் திருப்தியடைவதன் மேல், அவர்-அதற்குச் செலுத்தப்பட்ட வரியில் பத்தில் ஒன்பது பாகத்துக்குச் சமமான ஒரு தொகையை வாபஸ் செய்யவேண்டும்.

தண்டனைப் பகுதி.

14. இந்த சகாயச்சட்டங்களில் எதையாவது யாதொரு நபர் மீறிநடக்கும்பட்சத்தில், அவர் - ஐம்பது ரூபாய்வரையில் அபராத தண்டனையும், அந்தப்படி மீறிநடந்துகொண்டேயிருந்தால், முதல்தடவை மீறிநடந்ததற்காக குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டபிறகு அந்தப்படி மீறிநடந்துகொண்டேவரும் பிரதி தினத்துக்கும் பதினைந்து ரூபாய்வரையில் அபராத தண்டனையும் விதிக்கப்படுவதற்குள்ளாவார்.

எப். ஜெ. ரிச்சர்ட்ஸ்,
கவர்ன்மென்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.